2010 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. நான் rules—படிதான் நடக்கமுடியும். (குறுக்கீடுகள்) Rules—படிதான் நான் செய்யமுடியும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் கூறிய அனைத்து வார்த்தைகளும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான், முடிந்தது. (குறுக்கீடுகள்) இன்றைக்கு அவ்வளவுதான் (குறுக்கீடுகள்) இன்றைக்கு அவ்வளவுதான். Today, I have been very liberal. Please sit down. (குறுக்கீடுகள்) இல்லை, (குறுக்கீடுகள்)

(ஆ) கரும்பு, பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி விவசாயிகள் போராட்டம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, விவசாயிகள் பல கோரிக்கைகளை வைத்துப் போராடுவதாக மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் இங்கே இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்த அரசு, பொறுப்பேற்ற பிறகு சாதாரண இரக நெல்லுக்கு இப்பொழுது ஒரு குவிண்டாலுக்கு 1,050/- ரூபாயும், சன்ன இரக நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு 1,100/- ரூபாயும் வழங்கி வருவதை விவசாயிகள் பாராட்டி வரவேற்றிருக்கின்றார்கள். அதைப்போல கரும்புக்கு 9.5 கட்டுமானத்திற்கு 2,000/- ரூபாய் வழங்கி வருவதையும் விவசாயிகள் பாராட்டி வரவேற்றிருக்கின்றார்கள். நம்முடைய இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்திலே தந்த வாக்குறுதிப்படி, கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கிய கடன் 7,000 கோடி ரூபாயும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகள் பயிர் செய்வதற்காக கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கக்கூடிய கடனுக்கு வட்டி இல்லை என்றும் அறிவித்திருக்கின்றார்கள். அதைப்போல பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் 2008—லிருந்து இதுவரை 973.85 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு இந்தக் காப்பீடு மூலம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கொடுத்த கடனுக்காக டிராக்டர்

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2010 நவம்பர் 10 போன்றவற்றையெல்லாம் ஜப்தி செய்யக்கூடாதென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அது மத்திய அரசாங்கத்திடம் கேட்க வேண்டிய கேள்வியே தவிர மாநில அரசாங்கத்திடம் கேட்கக்கூடாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை எடுக்கப்போகிறேன். (குறுக்கீடுகள்) எடுக்கப் போகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் ஏன் அவசரப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

முற்பகல் 11-00

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கோயம்புத்தூரில் இரண்டு பள்ளி மாணவர்கள் கடத்திக் கொலை செய்யப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, கோயம்புத்தூரில் இரு பள்ளி மாணவர்கள் கடத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்ட நிலை குறித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. செ.ம. வேலுசாமி, திரு. செ. தாமோதரன், திரு. ஆர். சின்னசாமி, திரு. கு. சீனிவாசன் ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர், திரு. எம்.என். கந்தசாமி, திரு. கோவை தங்கம் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திருமதி ஜி. லதா, திருமதி ரா. லீமா றோஸ், திரு. கே. மகேந்திரன், திரு. வே. மாரிமுத்து, திரு. ப. டில்லி பாபு, திரு. ஞா. ஜாண் ஜோசப், திரு. சி. கோவிந்தசாமி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன், திரு. தி. இராமசாமி, திரு. கே. உலகநாதன், திருமதி பி. பத்மாவதி ஆகியோரும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், திரு. ரா. வரதராஜன் ஆகியோரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின்